# பிரிக்ஸ் வர்த்தக மன்ற தலைவர்களின் உரையாடலில் பிரதமர் பங்கேற்பு

ஆகஸ்ட் 22, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 22 ஆகஸ்ட் 2023 அன்று ஜோகன்னஸ்பர்க்கில் பிரிக்ஸ் வர்த்தக மன்ற தலைவர்களின் உரையாடலில் பங்கேற்றார்.

பிரிக்ஸ் வர்த்தக மன்றத்தின் ஆலோசனைகள் குறித்து தலைவர்களுக்கு விளக்கப்பட்டது.

சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகள் உட்பட, எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்த இந்தியா மேற்கொண்டு வரும் பல்வேறு சீர்திருத்தங்களை பிரதமர் எடுத்துரைத்தார். இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்குமாறு பிரிக்ஸ் வணிகத் தலைவர்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

மீள் மற்றும் உள்ளடக்கிய விநியோகச் சங்கிலிகளின் முக்கியத்துவத்தை கோவிட் எடுத்துரைத்ததாகக் குறிப்பிட்ட பிரதமர், இதற்காக பரஸ்பர நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பிரிக்ஸ் இணைந்து உலகளாவிய நலனுக்காக, குறிப்பாக உலகளாவிய தெற்கில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**ஜோகன்னஸ்பர்க்**
**ஆகஸ்ட் 22, 2023**